www.tamilarangam.net

# நம்பிக்கை

சர்வதேச வெளியீடு

நம்பிக்கை

# NAMBIKKAI
International

பகுதி 2 இல. 7 ஜனவரி 2000

# 2000



... ஒன்றுபட்டு
வலுவடைவோம்
நம்பிக்கையோடு
அமைதியான நவயுகத்தை
உருவாக்க...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






• **திருநெல்வேலி**

திருநெல்வேலி சந்தை 32 லட்சம் ரூபா செலவில் கட்டப்பட்டுள்ளது. முடிவடைந்த முதல் கட்டப் பகுதியை நல்லூர் பிரதேசச்சபை தலைவர் க.மணிபல்லவராசா வைபவரீதியாக திறந்துவைத்தார்.இச் சந்தையின் முழு ஆக்க வேலைகளுகு 80 லட்சம் ரூபா ஒதுக்கியுள்ளது.

• **நெடுந்தீவு**

நெடுந்தீவு துறைமுக துனைவாயிலின் கிழக்குப் பகுதியில் பாலமொன்று அமைக்கப்பட்டுள்ளது.
கடல் வற்றும் காலத்தில் படகுகள் துறைமுகத்துக்குள் செல்வது கஷ்டமென்பதால் பயணிகளுக்காக இப்பாலம் அமைக்கப்பட்டுள்ளது.

• **யாழ்ப்பாணம்**

நீண்ட காலம் நடைமுறையில் இல்லாதிருந்த தந்திச் சேவை இப்போது மீண்டும் வைபவரீதியாக தபால் அதிபர் கோடீஸ்வரன் ஆரம்பித்து வைத்துள்ளார்.

• **திருநெல்வேலி**

திருநெல்வேலியில் அமைந்துள்ள உயர் தொழில் நுட்ப நிறுவனத்திற்குப் புதிய கட்டடம் அமைக்கப்பட உள்ளது. இதற்கான 6 ஏக்கர் நிலம் கோண்டாவில் இருபாலை வீதியில் கொள்வனவு செய்யப்பட உள்ளது. ஆக்க வேலைகள் துரிதமாக ஆரம்பிக்கப்படுவதாக நிறுவன அதிபர் தெரிவித்துள்ளார்.

• **சுண்ணாகம்**

சுண்ணாகம் சனசமூக நிலயத்தில் சிவன் சிறுவர் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சர்வோதயா தலைவர் சங்கரபிள்ளை சம்பிரதாய முறைப்படி பாடசாலையை ஆரம்பித்துவைத்தார்.

• **பருத்தித்துறை**

பருத்தித்துறை முதியோர் தின விழாவும் சிறுவர் சாசன பத்தாவது ஆண்டு விழாவும் மிகச்சிறப்பாக நடைபெற்றுள்ளது. கவிதைகள் பேச்சுகள் மற்றும் பல அம்சங்களுடன் இவ் விழா திறம்பட நடைபெற்றுள்ளது. பிரதேச செயலர் ஏ. சிவசுவாமி தலைமையில் நடைபெற்றது.

• **சாவகச்சேரி**

தென்மராட்சி கால் நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் பால் சேகரிக்கும் நிலையங்கள் அமைத்துள்ளது. கல்வயல், கெருடாவில், மீசாலை, கைதடி, தனங்கிளப்பு,அல்வாய்,ஆகிய பகுதிகளில் இந்த நிலையங்கள் தற்பொழுது திறக்கப்பட்டுள்ளது.

# 2000 ஜனவரி 10 இல் கைச்சாத்திடப்படும் பயங்கரவாத நிதிவழங்குவதை தடுக்கும் சர்வதேச ஒப்பந்தம்

பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதி வழங்குவதை தடுக்கும் ஐ.நா. சர்வதேச ஒப்பந்தம் 2000 ஆம் ஆண்டு ஜனவரி 10 இல் நியூயோக்கில் கைச்சாத்திடுவதற்காக வைக்கப்பட்டதுடன் இலங்கை இந்த சர்வதேச ஒப்பந்தத்தில் இரண்டாவது நாடாகக் கைச்சாத்திட்டுள்ளது. இலங்கை ஐ.நா. நிரந்தரப் பிரதிநிதி ஜோன் டி.சேரம் இலங்கை சார்பாக இதில் கைச்சாத்திட்டுள்ளார். இந்த ஒப்பந்தத்தை ஐ.நா.வில் சமர்ப்பித்த பிரான்ஸ் குடியரசின் பிரதிநிதியே இங்கு முதல் கையொப்பமிட்டார். பயங்கரவாதத்தை ஒழிக்கும் நோக்கத்திற்கு சர்வதேச ஒத்துழைப்பை முடக்கிவிடும் முயற்சியில் 1999 டிசம்பர் மாதம் ஐ.நா.வின் 54 வது பொதுச்சபைக் கூட்டத்தில் இந்த ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

கடந்த வருடம் மார்ச் மாதம் ஐ.நா. வின் பயங்கரவாத ஒழிப்பு தொடர்பான ஏற்பாட்டுக் குழுவின் கவனத்திற்கு பிரான்ஸ் முன்வைத்த இந்த யோசனையை ஐ.நா. வின் 188 அங்கத்துவ நாடுகளும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டுள்ளது. இக்கட்டான பிரச்சனையாக இருக்கும் பயங்கரவாத நிதி சேகரிப்பு மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு நிதி கிடைக்கும் வழிகள் பற்றி சர்வதேச சமூகம் மிக வெகுவாக அடையாளங்கள் கண்டிருப்பதனால் தற்போது வழக்கத்தில் இருக்கும் சட்ட மூலங்களுக்கு மேலதிக சட்டங்கள் இயற்ற வழிவகுக்கும் பிரான்ஸின் முயற்சியை இலங்கை வரவேற்று இருக்கிறது.

வெளிநாடுகளில் பயங்கரவாதக் குழுக்கள் சேகரிக்கும் நிதிகள் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு முக்கிய உறுதுணையாக அமைந்துள்ளது. தர்மநிறுவனங்கள், சமூககலாசார நோக்கங்களைக் கொண்டவையாக தோற்றமளிக்கும் முன்னிலை நிறுவனங்களை பயங்கரவாதிகள் அவர்களது நிதி சேகரிக்கும் நடவடிக்கைகளுக்கு பயன்படுத்துவதாக சர்வதேச சமூகம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இவ் உடன்படிக்கையை ஏற்றுக்கொள்வதை இலங்கை முற்றிலும் ஆதரிப்பதாக ஐ.நா. வில் உரையாற்றிய வெளிநாட்டு அமைச்சர் லகஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார். சாவதேச பயங்கரவாதத்தை தடை செயயும் ஐ.நா. ஏற்பட்டுக்குழுவின் உப தலைமைப் பதவியை வகிக்கும் இலங்கை, சில சிக்கலான விவகாரங்களை பற்றி ஏற்பாட்டுக் குழுவுடனும் பயங்கரவாதம் பற்றிய செயற் குழுவுடனும் பிரத்தியோக ஆலோசனைகளை நடத்தியுள்ளது.

அங்கத்துவ நாடுகள் உள்நாட்டில் இது தொடர்பான சட்டங்களை உருவாக்குவதன் மூலம் ஒப்பந்தத்தை திறம்பட அமுல் நடத்தமுடியும். நேரடியாக மற்றும் மறைமுகமாக நிதி வழங்கள், நிதி வசூல் செய்தல் குற்றச் செயல்களென இநத ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ளது. ஐ.நா. விற்கு பிரான்ஸ் சமர்ப்பித்துள்ள ஆலோசனையில் நிதி வசூல் செய்வது சதித்திட்ட நடவடிக்கையாக விபரிக்கிறது.

## சர்வதேச பயங்கரவாதம் பொது நலவாய அமைப்பின் கண்டனத்திற்கு

தென்னாப்பிரிக்கா டர்பன் (Durben) நகரில் நடைபெற்ற பொது நலவாய அமைப்பு நாடுகளின் அரசியல்த் தலைவர்கள் கூட்டத்தில் இறைமையுள்ள நாடுகளின் அரசியல் பொருளாதார சமூக சீர்குலைவை ஏற்படுத்தும் சகல வித பயங்கரவாத நடவடிக்கைகளும் பலத்த கண்டனத்துக்கு உள்ளாகியது.

"பயங்கரவாத ஒழிப்பை மையமாகக்கொண்ட பொது நலவாய அமைப்பின் செயல்ப்பாடுகள் உலக ரீதியான நற்பயனை அளிக்கக் கூடியவையாகும்." என்று கூறிய இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் பயங்கரவாதிகளின் வெறுக்கத்தக்க செயல்களைஒழித்துக்கட்ட இயன்ற சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ள வேண்டும் என்பதை சபையில் வலியுறுத்தினார்.

## விசாரணைக் குழு யாழ் குடாநாட்டில் 201 காணாமல் போனோரின் தகவல்கள் கண்டுபிடிப்பு

குடாநாட்டில் காணாமல் போனோர்களைப் பற்றிய விசாரணைகளைப் பற்றிய விசாரணைகளை மேற்கொள்வதற்கு 1996 நவம்பர் மாதம் அரசாங்கம் நியமித்த விசாரணைக் குழவினால் விசாரணைகளின் பின் 201 பேர் சிறையிலிருப்பதாகவும் 16 பேர் மரணமடைந்ததாகவும் தெரியவந்துள்ளதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ஓய்வு பெற்ற சிரேஷ்ட நிர்வாக அதிகாரியெருவராகிய பந்துல குலதுங்கா வின் தலைமையிலான இவ் விசாரணைக் குழுவிடம் 2621 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அளிக்கப்பட்ட விபரங்கள் ஒப்பிடுகையில் காணப்பட்ட முரண்பாடுகளினால் 765 முறைப்பாடுகள் நிருபிக்கப்படவில்லை.

பல சிறைச்சாலைகளுக்கு விஜயம் செய்தும் பொலிஸ் நிலையங்கள் தடுப்புக்காவல் நிலையங்கள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட விபரங்கள் ஆதாரமாகக் கொண்டு இவ் விசாரணைப் பட்டியலில் 201 பேரின் தகவல்கள் விசாரணைக் குழவினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்திற்கு சென்ற இவ் விசாரணைக் குழு யாழ் அரச அதிபர் ஊடாக முறைப்பாட்டாளர்களை வரவழைக்கப்பட்டு சாட்சிகளைப் பதிவு செய்தனர். இவ் விசாரணைகளுக்கு சமூகமளிக்கும்படி வானொலி, பத்திரிகைகள் மூலம் விளம்பரங்கள் செய்யப்பட்டன.குறிப்பாக யாழ்ப்பாணத்தில் பிரசுரமாகும் "உதயன்" பத்திரிகை மூலம் விளம்பரங்கள் செய்யப்பட்டன.

சிறையிலிருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்ட 201 பேரைத்தவிர மேலும் 174 முறைப்பாடுகள் விசாரிக்கப்பட்டு வருவதாக பாதுகாப்பு அமைச்சு தகவல் தெரிவிக்கின்றது.

## குமார் பொன்னம்பலம் கொலை தொடர்பாக விசாரணை மேற்கொள்ள அரசு உடனடிப் பணிப்பு

அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் தலைவர் குமார் பொன்னம்பலம் ஜனவரி 5 திகதி வெள்ளவத்தையில் கொலை செய்யப்பட்டுள்ளார்.அரசின் உடனடிப் பணிப்பில் புலன் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதுடன் அந்த துரதிஷ்ட நாளில் பொன்னம்பலம் அவர்களுடன் காரில் சென்ற சந்தேகத்துக்குரிய நபரைத் தேடுவதற்கு வலை வீசியிருப்பதாக குற்றவியல் துப்பறியும் இலாகா தெரிவித்துள்ளது. பொன்னம்பலத்தின் மரணச் செய்தியை அறிந்ததும் அதிர்ச்சியடைந்ததாகத் திருமதி பொன்னம்பலம் அவர்களுக்கு ஜனாதிபதி அனுப்பிய அனுதாபச்செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒருமைப்பாட்டிற்கு நேசக்கரங்களை நீட்டும் ஜனாதிபதி குமாரதுங்கா தவறான வழியில் சென்ற தமிழ் இளைஞர்களை நாட்டின் அமைதியை கட்டியெழுப்ப கை கொடுக்கும்படி அறைகூவல்

டிசெம்பர் 22 ஆம் திகதி இரண்டாவது தடவையாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா தமிழ் இளைஞர்கள் வன்முறைகளை கைவிட்டு தேசத்தின் அமைதியை கட்டியெழுப்ப கைகொடுக்கும்படி வேண்டுகோள் விடுத்துள்ளார். ஜனாதிபதியின் உரையின் சில பகுதிகள்.

... நான் பெற்றெடுத்த வெற்றியின் அர்த்தத்தை நாம் முழுமையாக புரிந்து கொள்ள வேண்டும் சமாதானத் தீபத்தை எமது மக்களின் அரைவாசிப்பேர் தூக்கிச்செல்ல ஏனைய அரைவாசிப்பேர் வாழாது இருக்கவேண்டும் என இன் நாட்டு மக்கள் கருதவில்லை என்பது எனக்கு புரிந்தது...

... மீண்டும் ஒரு உயிர் துடிப்பான தேசத்தை கட்டியெழுப்ப வேண்டிய பலத்தை இருவலுவான கட்சிகளும் ஒன்று சேர்ந்து பிரயோகிக்க வேண்டும்...

திரு விக்கிரமசிங்கா அவர்களே, நீங்களும் உங்களது ஆதரவாளர்களும் இந்த அரசாங்கத்துடன் இணைய வேணடுமென நான்நேசக் கரம் நீட்டுகிறேன்...

... பயங்கரவாதத்தையும் மரணத்தையும் கொண்ட இந்த கலாசார்ததைத் துடைத்தெறிய உங்களை அழைக்கின்றேன். எமது தேசத்தின் ஆன்மாவை மீண்டும் மனிதத் தன்மையானதாக மாற்றும் பயணத்தில் இணையுமாறு எங்களது தொண்டர்களையும் அழைப்போம்...

... பயங்கரவாதத்தின் அச்சுறுத்தல் காரணமாக நீண்ட காலமாகப் புலிகளை ஆதரிக்கும் எமது தேசத்தின் இளைஞர்களையும், அப்பாவி மக்கள் மீதும் நான் அனுதாபம் கொள்கிறேன். எனது சொந்தப் பிள்ளைகளை அரவணைப்பது போல உங்களை வாஞ்சையுடன் அரவணைக்கிறேன். உங்கள் இதயத்தை வருத்திக் கொண்டிருக்கும் வெறுப்புணர்வைக் கைவிட்டு உங்களது மீட்சிக்காகவும் எமது மீட்சிக்காகவும் கூட்டான உன்னதப் பணியில் இணையுமாறு கேட்டுக் கொள்கிறேன்...

... குறிப்பாகப் பிரபாகரன் மீது தவறான நம்பிக்கை கொண்டுள்ள எமது தமிழ் சகோதர சகோதரிகளே சகல விடுதலைப் புலிகளையும் நிராகரியுங்கள். புலிகள் பின்பற்றும் வன்முறைகளையும் வெறுப்புணர்வையும் நிராகரியுங்கள் என உங்களைக் கேட்டுக் கொள்கிறேன்...

## சந்திரிக்கா குமாரதுங்கா மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு

டிசெம்பர் 21 திகதி நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் இலங்கையின் ஐந்தாவது ஜனாதிபதியாக சந்திரிக்கா குமாரதுங்கா மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார். பதிவு செய்யப்பட்டுள்ள வாக்காளர்களுள் 70% வாக்காளர்கள் வாக்களித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

| தேர்தல் முடிவுகள் | | |
|---|---|---|
| ஜனாதிபதி குமாரதுங்கா (பொ.ஐ.மு.) | 4,313,157 | 51.12 % |
| ரனில் விக்கிரமசிங்கா (ஐ.தே.க.) | 3,627,780 | 42.71 % |
| நந்தன குணதிலக்கா (ம.வி.மு.) | 344,173 | 4.08 % |

## அமைதியான சுமுகமான ஜனாதிபதி தேர்தல்

**சர்வதேச கண்காணிப்பாளர்கள்**

டிசெம்பர் 21 ஆம் திகதி நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல் அமைதியாகவும் சுமுகமாவும் நிகழ்ந்ததாக சர்வதேச கண்காணிப்பு குழு அறிவித்துள்ளது. சில சம்பவங்கள் அறிவிக்கப்பட்ட போதிலும் தீவில் பரவலாக அமைதி நிலவியதாக மேலும் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

தேர்தல் கண்காணிப்பு குழுக்களுக்கு தலைமை வகித்த U.K. அரசியல் ஆய்வு நிலயத்தின் அதிபர் பேராசிரியர் லோர்ட் தேசாய் தேர்தல் நடாத்திய விதிமுறைகள் பற்றி மகிழ்ச்சியும் திருப்தியும் கொண்டுள்ளதாக பத்திரிகையாளரிடம் தெரிவித்தார்.

சர்வதேச கண்காணிப்பு குழுவின் அறிக்கையை தேர்தல் ஆணையாளரிடம் கையளித்த பேராசிரியர் தேசாய் தமது அறிக்கையில் 18 சிபார்சுகளும் அடங்கி இருப்பதாக மேலும் தெரிவித்தார்.

# நம்பிக்கை

சர்வதேச வெளியீடு

### புலிகளின் பயங்கரவாதத்திற்கான சர்வதேச தொடர்பை துண்டிக்கும் சட்டமூலம்

உலக சமாதானத்தின் மீது மேலும் புதிய எதிர்நோக்கங்களுடன் புதிய மூவாயிரமாம் ஆண்டு உதயமாகியது. பய்கரவாதத்திற்கு நிதி வழங்குவதை தடை செய்யும் ஐ.நா. வின் உடன்படிக்கை ஜனவரி 10 ஆம் திகதி கைச்சாத்திடுவதற்காக வைக்கப்பட்டிருப்பது உலகில் சமாதானச் சூழ்நிலை ஏற்படுத்துவதில் நம்பிக்கை ஏற்படுத்துகிறது. பிரான்ஸ்,இங்கிலாந்து,நெதர்லாந்துகள் ஆகிய நாடுகளுடன் இணைந்து இலங்கை முதல் நாளன்று இந்த ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டது.

இன்னொரு நாட்டில் பயங்கரவாத நடவடிக்கைகளுக்குத் துணைபுரியும் நிறுவனங்கள் நிதி திரட்டுதல் மற்றும் கையளித்தல்களை கண்காணிபதற்கு இவ்வுடன்படிக்கை உதவுகிறது. இன்னொரு நாட்டில் பயங்கரவாத செயல்களுக்காக வேறொரு நட்டில் நிதி திரட்டுவது உடந்தையாய் இருப்பது போன்றவையை இது தடைசெயகின்றது. பயங்கரவாத நிதி விடயத்தில் உடந்தையானவர்களைச் சட்டத்தின் முன் நிறுத்தவும் குற்றவாளிகளென காணப்படும் பட்சத்தில் நாடுகடத்தவும் இந்தச் சட்டம் நாடுகளை வற்புறுத்துகின்றது. நேர்முகமாகவும் மறைமுகமாகவும் நிதிசேகரிக்கும் முறைகளை அதாவது தர்மகாரியங்கள், சமூக சேவைகள் என்ற போர்வையில் பயங்கரவாதத்திற்கு நிதி திரட்டுவதலையும் இதில் உட்படுத்தபட்டுள்ளது.

எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாதிகளுடன் இலங்கை மேற்கொண்டுள்ள முனைப்புகளுக்கு இந்த உடன்படிக்கை சாத்தியமான பெறுபேறுகளை ஏற்படுத்துமென நம்பமுடிகிறது. உலகலாவிய ரீதியில் அமைந்துள்ள வலைப்பின்னல் முன்னிலை நிறுவனங்கள் இலங்கையில் எல்.ரீ.ரீ.ஈ. யினருக்கு நிதி சேகரித்து அனுப்புவதில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன என்பது சகலரும் அறிந்த விடயம். (இரகசியமாக நிர்ப்பந்தப்படுத்துவதன் மூலமும்) தர்ம, சமூக அலுவல்கள் போன்ற வெளிவேசங்கள் ஊடாகவும் ஆயுதக் கடத்தல் மூலமும் நிதி திரட்டப்படுகிறது.

சமய, கலாச்சார, நலநோக்குப் போன்ற வெளிவேசத்துடன் எல்.ரீ.ரீ.ஈ. முன்னணி நிறுவனங்கள் கனடா, அமெரிக்கா, ஐரோப்பா, ஆபிரிக்கா, ஆசியா நாடுகளில் இயங்கி வருகிறது. களியாட்டக் கட்டணங்கள் விளையாட்டு விழாக்கள் போர்வையில் பாரிய அளவிலான நிதி வசூலிப்புகள் இலண்டன், பாரிஸ், பொண்,டொரன்டோ ஆகிய நகரங்களில் இடம் பெற்றதை "நம்பிக்கை" இதற்கு முன்பும் எடுத்துக் காட்டியுள்ளது. இந்தக் களியாட்டங்களும் தர்ம நிகழ்ச்சிகளும் மூலம் அப்பாவி இளம் பிள்ளைகளின் மனதை கவரச்செய்து சேர்க்கப்படும் நிதிகள் எல்.ரீ.ரீ.ஈ. பயங்கரவாத நிதி கணக்கில் வைப்புச் செய்யப்படுகின்றது. வெளிநாட்டில் அதிக தமிழர் வாழும் கனடாவிலிருந்து புலிகளின் வன்செயல்களுக்காக வருடம் 8.4 டாலர்கள் சேகரிக்கப்படுவதாக மதிப்பீட்டுள்ளதாக கனடா National Post 30.12.99 கூறியுள்ளது. புகலிடம் கோரி மேற்கு நாடுகளுக்கு வந்தடைந்திருக்கும் சுமார் 500,000 தமிழர்கள் (இதில் அதிகமானோர் பிரான்ஸ்) இடமிருந்து புலிகள் பலவந்தமாக நிதி சேகரிப்பதாக பிரான்ஸ் Le Figaro 06.01.00 க்கு Leclerc De Sablon கூறியுள்ளார். இலங்கையில் அவர்களது உறவினர்கள் புலிகளின் பிடியில் பணயக்கைதிகளாக சிக்கி இருப்பதனால் வேறு வழியில்லையென்று பத்திகை சுட்டிக்காட்டியுள்ளது. இலங்கையின் நாசகார தமிழ் பிரிவினைக் குழு கனடா,அமெரிக்கா, இந்தியா, வட கிழக்காசியா எங்கும் தமிழ் சமூகத்திடம் நிதி வசூலிப்பதாக New York Times 28.12.99 க்கு Barbara Crossette கூறியுள்ளார்.

புலி பயங்கர வாதிகளுக்கு பின்னணியில் இருக்கும் மறைமுக சக்திகளை சர்வதேச சமூகம் இனங்கணடுள்ளமை இறுதியில் மகிழ்ச்சி அளிக்கின்றது. இலங்கை பயங்கரவாதத்தில் இருந்து விடுதலை பெறுவதற்காகச் செல்லும் நீண்ட பயணத்தில் இதுவே ஆரம்பமென நம்பிக்கை கொள்வோம்.

**தீவினையார் அஞ்சார். விழுமியார் அஞ்சுவர் தீவினை என்னும் செருக்கு.**

**-அதிகாரம் 21- தீவினை யச்சம்.**

**தீய காரியங்கள் செய்யப் பாவிகள் பயப்படமாட்டார்கள். ஆனால் மேலோர் தீய கரியங்கள் செய்ய நடுங்குவர்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஸ்ரீ லங்கன் எயார் லைன் ஐரோப்பா விமானப் பயணங்கள் அதிகரிப்பு

விமானப் பயணங்களை அதிகரிப்பதற்காக இலங்கை இத்தாலியுடன் நடாத்திய பேச்சு வார்த்தைகள் வெற்றியடைந்துள்ளது. இப் பேச்சுவார்த்தைகளின் பெறுபேறுகளினால் வாரம் இரண்டுமுறை ரோம் வரை நடைபெற்ற விமானப் பயணங்கள் ரோம், மிலான் வரை வாரம் நான்கு விமானப் பயணங்களாக அதிகரிக்கச் செய்ய முடிந்துள்ளது.

இந்த வெற்றிகரமான முடிவுகளினால் இலங்கை விமானச் சேவைகளுக்குக் கிடைத்த தரை இறங்கும் அனுமதி அதிகரிப்பு ஐரோப்பாவில்வசிக்கும் இலங்கையர்களுக்கும் இலங்கைத் தீவை வந்தடையும் உல்லாசப் பிரயாணிகளுக்கும் பெரும் வசதியை ஏற்படுத்தும்.

இரு நாட்டு விமானச் சேவைகளும் இணைந்த தரை இறங்கும் அனுமதிகளை பகிர்ந்து மாலைதீவு ஊடாக அதிக விமானப் பயணங்களைக் கொண்ட கூட்டு விமானச் சேவைகளை நடாத்தும் திட்டமொன்றுக்காக இரு நாடுகளும் இணங்கியதாக மேலும் செய்திகள் கூறுகின்றன.

## உலக உணவு-விவசாய அமைப்பு ஆலோசனைக் குழு தேர்தலில் இலங்கை போட்டியின்றித் தெரிவு

உலக உணவு விவசாய அமைப்பின் (F.A.O.) ஆலோசனைக் குழுவைத் தெரிவு செய்வதற்காக 1999 நவம்பர் மாதம் ரோமில் (Rome) நடைபெற்ற தேர்தலில் இலங்கை போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டுள்ளது. F.A.O. அமைப்பின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட இந்த ஆலோசனைக் குழுவிற்கு இலங்கையை போட்டியின்றி ஆசியாக் குழுவின் எகோபித்த பிரதிநிதியாக தெரிவு செய்யப்பட்டதாக வெளிவிவகார அமைச்சு தகவல்கள் தெரிவிக்கின்றது. இலங்கையின் இந்த வெற்றி ஆசியா வலயத்தின் ஒத்துழைப்பை எடுத்துக் காட்டுகிறது.

மீனவர்களின் நடத்தை நெறி தொடர்பாக வளங்கும் Margarito Lizarraga பதக்கத்தை வளங்குவதற்காக இலங்கை மீன்பிடித் தொழிலாளர் தொடர்பான அரச சார்பற்ற அமைப்பொன்றான -தேசிய மீனவர் ஒருங்கிணைப்பு NAFSO வை உலக உணவு-விவசாய அமைப்பினால் தெரிவு செய்யப்பட்டமை மற்றுமொரு குறிப்பிடத்தக்க சாதனையாகும். உலக உணவு-விவசாய அமைப்பின் அதிபரிடம் இப் பதக்கத்தை NAFSO சார்பாக ரோமா இலங்கைத் தூதர் ரீ. எச். வூர்ஸ் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

## யாழ். குடாநாட்டிற்கு தொலைத் தொடர்பு வசதிகள்

வட மாகாண புனர்நிர்மாண புனரமைப்பு அதிகார சபை ரூபா 541,021 செலவில் யாழ் குடாநாட்டின் 11 தபால் நிலயங்களுக்குத் தொலைத் தொடர்பு வசதிகளை ஏற்படுத்தியுள்ளது. மக்களின் அதிமுக்கிய தேவையொன்றாகிய தொலைத் தொடர்பு வசதிகள் தங்கள் கிராமங்கள் வரை கிட்டியமையையிட்டு மக்கள் மிக திருப்தி கொண்டுள்ளனர்.

| | | |
|---|---|---|
| சுண்டுக்குளி | (021) | 2250 |
| வண்ணார்பண்ணை | | 2553 |
| மானிப்பாய் | | 2650 |
| கொக்குவில் | | 2750 |
| உரும்பிராய் | | 2447 |
| வேலணை | | 2533 |
| அனலைதீவு | (07021) | 2346 |
| நயினாதீவு | | 2345 |
| யாழ்ப்பாணம் | | 2250 |
| பருத்தித்துறை | | 3250 |
| கரவெட்டி | | 3252 |

கீழ்க்காணும் உப தபால் நிலயங்களுக்கும் தொலைத் தொடர்பு வசதிகள் கிடைத்துள்ளது :

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாணம் பஸார் | | 2477 |
| நல்லூர் கோவில் | | 2252 |
| ஆனைப்பந்தி | | 2251 |
| ஆனைக்கோட்டை | | 2610 |
| பிடரிக்கோவிலடி | | 2600 |
| திருநெல்வேலிச் சந்தி | | 2265 |
| நீராவியடி | | 2285 |
| எழுவைத்தீவு | (07021) | 2347 |
| புலோலி | | 3251 |

## பாரிய திருகோணாமலைத் துறைமுக அபிவிருத்தித் திட்டம்

ரூபா 1.7 மில்லியன் செலவில் திருகோணாமலைத் துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் பாரிய திட்டமொன்று துறைமுக அதிகாரசபையினால் செயல்ப்படுத்தியுள்ளது. ஜப்பான் நிறுவனமொன்றினால் இத் திட்டத்தின் ஆக்க வேலைகள் டிசம்பர் மாதத்தில் ஆரம்பித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

திருகோணாமலைத் துறைமுகத்தில் கப்பல்கள் தரித்து நிற்கும் வசதிகளை அதிகரிக்கச் செய்யும் இத் திட்டத்தின் கீழ் கொள்கலன்கள் (கண்டெயினர்கள்) உட்பட சகலவித கப்பல் சரக்குகளையும் இறக்குமதி செய்யும் வசதிகளைக் கொண்ட 825 அடி நீளமான புதிய இறங்குதுறை ஒன்றும் கட்டப்படஉள்ளது.

இந்த அபிவிருத்தித்திட்ட வேலைகள் 2001 ஆண்டில் நிறைவுபெற உள்ளதாக துறைமுக அதிகாரசபை அதிகாரிகள் கூறுகின்றனர்.

## செய்திகள்...?


ஸ்ரீ லங்கவின் அன்றாட செய்திகளை இன்டர்னெட் INTERNET மூலம் அறிந்து கொள்ள :

➔ http://www.news.lk/

➔ http://www.lanka.net/

➔ http://www.lankanet.org/

... ஊடாக தொடர்புகொள்ளவும்.



சகல விபரங்களுக்கும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி

"NAMBIKKAI" International

Ambassade du Sri Lanka - 15 rue d'Astorg - 75008 Paris – FRANCE – E-Mail : nambikkai@ifrance.com

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்